// மிக மிக அவசரம் // தனி கவனம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.1225/ஆ5/2024, நாள்.09.08.2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – போதை பொருள் பயன்பாடற்ற தமிழ்நாடு – பெருந்திரள் போதை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றல்– 12.08.2024 அன்று ஒரு கோடிக்கும் அதிக மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி – உரிய ஏற்பாடுகள் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவித்தல் – சார்பு

பார்வை சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.047393/எம்/இ1/2024, நாள். 08.08.2024

•••••

பார்வையில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க, போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான சமூக விழிப்புணர்வு பெறும் நோக்கில் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எதிர்வரும் 12.08.2024 அன்று அனைத்து வகை பள்ளிகளிலும், உயர் மற்றும் மேல்நிலை வகுப்பில் பயின்று வரும் மாணவர்கள் அனைவரும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள போதைப் பழக்கத்திற்கு எதிரான பெருந்திரள் உறுதிமொழி ஏற்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள மாவட்டக் கல்வி அலுவலர்கள் (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், 12.08.2024 அன்று அனைத்துவகைப் பள்ளிகளில் உறுதிமொழி எடுக்கப்பட்ட நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும், நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள் விவரங்களை இணைப்பில் கண்டுள்ள படிவம் 1–ல் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலிருந்தும் பெற்று படிவம் –2ல் பூர்த்தி செய்து இவ்வலுவலகம் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும், நிகழ்வின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்கள் Video–க்கள் மற்றும் படிவம் 2–னை dad.ebcid@gmail.com மற்றும் velloreceo@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு 12.08.2024 பிற்பகல் 2.00 மணிக்குள் அனுப்பிவைக்கமாறு மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

https://enforcementbureautn.org/pledge என்ற இணைய இணைப்பினை பயன்படுத்தி மின்னணு உறுதிமொழி ஏற்க வசதி செய்யப்பட்டள்ளது. இதனை பயன்படுத்தி மாணவர்கள் உறுதிமொழி ஏற்பதுடன் உறுதிமொழி ஏற்றமைக்கான மின்னனு சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்தகவலை அனைத்துவகை பள்ளி மாணவர்களுக்கு தெரிவித்து மின்னணு உறுதிமொழி ஏற்க ஊக்குவிக்குமாறு தெவிக்கப்படுகிறது.

ஆசிரியர்கள் உறுதிமொழியினை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஏற்றிடவும் அதன் புகைப்படம் (geo camera) மற்றும் Vidoe (geo camera Video) மூலம் எடுத்து ஆவணப்படுத்திடவும், உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் பயன்பாடு தவிர்த்தல் சார்ந்து வல்லுநர்கள் , காவல்துறை, சட்டவல்லுநர்கள், மருத்துவர்கள் 10 நிமிட உரையாற்றிடவும், மாணாக்கர்களுக்கான பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, Slogan எழுதும் போட்டி, ஓவியப்போட்டி, கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஆகியவற்றினை 09.08.2024 மன்ற செயல்பாடுகளில் நடத்தி சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்து மாணவர்களையும் Anti Drug Club சிறப்பு செயல்பாடாக செயல்படுத்திடவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட செயல்பாடுகளை அனைத்து அரசு / அரசு நிதியுதவி / தனியார் பள்ளிகளில் செயல்படுத்த உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீள மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி) தெரிவிக்கப்படுகிறது.

(குறிப்பு - 12.08.2024 அன்று அனைத்துவகைப் பள்ளிகளில் உறுதிமொழி எடுக்கப்பட்ட விவரத்தினை படிவம் 2-ல் பூர்த்தி செய்து அன்றே பிற்பகல் 2.00 மணிக்குள் இவ்வலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு தவறாமல் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.)

இணைப்பு -

1. உறுதிமொழி – ஒளிநகல் (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
2. படிவம் 1, 2, 3 மின்னணு உறுதிமொழி இணையபக்க நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் -
மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
(இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி)
வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)

நகல்-

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு
   தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள்,
   வேலூர் மாவட்டம்.
   (சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் மூலமாக)